இந்தியா டுடே

அக்டோபர் 11, 2006 ◆ இந்தியா டுடே 49



# 50 வயது ஸ்டுடியோ

**வரலாறு:**
செல்லுலாய்டு பயணங்கள்



ஜெமினி ஸ்டுடியோ, ஏ.வி.எம். ஸ்டுடியோ வரிசையில் தமிழக செல்லுலாய்டு வரலாற்றில் தனி முத்திரை பதித்த பிரசாத் ஸ்டுடியோவுக்கு வயது 50. அதன் நிறுவனர் எல்.வி.பிரசாத்துக்கு மரியாதை செலுத்தும் விதத்தில், இதை ஒரு பிரம்மாண்ட விழாவாகக் கொண்டாடி மகிழ்ந்தனர் அவரது வாரிசுகள். இதையொட்டி இந்திய தபால்துறை சார்பாக எல்.வி. பிரசாத்துக்கு ஐதராபாதில் அஞ்சல் தலை வெளியிடப்பட்டது. கமல் ஹாசன் வந்திருந்து கௌரவித்தார். "ஆசியாவின் மிகப் பெரிய போஸ்ட்-புரொடக்ஷன் ஸ்டுடியோவான பிரசாத் ஸ்டுடியோவில், 1200 பேர் பணியாற்றுகின்றனர். இந்தியா மட்டுமல்லாமல், சிங்கப்பூர், துபாய் என்று பல நாடுகளிலும் கிளை பரப்பி இருக்கும் பிரசாத் ஸ்டுடியோவின் ஆண்டு வியாபாரம், ரூ.200 கோடி" என்று நிறுவனத்தின் பயண தூரத்தைப் பட்டியல் போட்டார் நிர்வாகி ஒருவர். கருப்பு-வெள்ளை, ஈஸ்ட்மென், சினிமாஸ்கோப், டிஜிட்டல் என்று தொடர்கிறது பயணம். பயணங்கள் முடிவதில்லை!